ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2032/24 - 2017 අගෝස්තු මස 16 වැනි බදාදා - 2017.08.16
2032/24 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017, ஓகத்து 16.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01. | 07.01 | 0701.90 | பிற உருளைக் கிழங்கு | ரூபா 40.00 கி. கி. ஒன்றுக்கு |
| 02. | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | ரூபா 40.00 கி. கி. ஒன்றுக்கு |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| 1 ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 03. | 07.13 | 0703.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - முழுமையானவை | ரூபா 10.00 கி. கி. ஒன்றுக்கு |
| | | 0703.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - பிளக்கப்பட்டவை | ரூபா 15.00 கி. கி. ஒன்றுக்கு |
| | | 0703.40.21 | மஞ்சள் பருப்பு - முழுமையானவை | ரூபா 10.00 கி. கி. ஒன்றுக்கு |
| | | 0703.40.22 | மஞ்சள் பருப்பு - பிளக்கப்பட்டவை | ரூபா 15.00 கி. கி. ஒன்றுக்கு |

8- 1085

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.